செ.வெ.எண்.248 நாள்:16.04.2018

# செய்தி வெளியீடு

முன்னாள் படைவீரர்களின் சிறார்கள், இராணுவத்தில் அலுவலராக நியமனம் பெற CDS / AFCAT ஆகிய தேர்வுகளுக்கான பயிற்சியினை இணையதளம் வாயிலாக வழங்கப்படவுள்ளது. தேர்வுகளுக்கு தேவைப்படும் புத்தகங்களுக்கான link தரப்படும். பொறியியல் பட்டப்படிப்பு / கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு முடித்த கல்லூரி இறுதியாண்டு பயின்று கொண்டிருக்கும் முன்னாள் படைவிரர்களின் சிறார்கள், அவர்கள் இருப்பிடத்திலிருந்து www.exweletutor.com என்ற இணையதளத்தின் மூலம் பயிற்சி பெறலாம். மாணவர்களுக்கு ஒவ்வொரு வார இறுதியிலும் பொது அறிவு, ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்கில் மாதிரி தேர்வு நடைபெறும்.

இணையதளத்தில் விண்ணப்பிக்கும் முன்னர் படைவீரர்களின் தகுதியுடைய சிறார்களுக்கு login ID மற்றும் Password தனித்தனியாக அளிக்கப்பட்டு அன்னாரின் பயிற்சி வகுப்பின் முன்னேற்றம், தகுதி படைத்த கல்வியாளர்களால் கூர்மையாக கண்காணிக்கப்பட்டு தேவைப்படும் வழிகாட்டுதல் மற்றும் விளக்கங்கள் அளிக்கப்படும்.

06 மாத online வகுப்பிற்கு பின் 10 நாட்கள் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் சென்னையில் நேரடி பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டு, நுழைவுத் தேர்வுக்கு தயார்படுத்தப்படுவார்கள். இப்பயிற்சியில் முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் அதிக அளவில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு திருநெல்வேலி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திரு ந.முருகன் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.